# A Comparative Study of Theologies Between Hinduism, Christianity, and Islam

Seyyathu Mohammed Hakeema Beevi[1] & Iqbal Saujan[2]

[1]Assistant Lecturer Department of Islamic Studies, Faculty of Isalmic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka

hakee97693@gmail.com[1], saujaniqbal95@gmail.com[2]

***Abstract* :** *Religion is the moral basis for all affairs of human beings. Stephen Juan mentioned in his study, there are approximately 4,300 religions in the world. Among them, Buddhism, Christianity, Hinduism, Islam, and Judaism are the most influential religions in the world. These regions have their own specific cults, teachings, cultures, and customs. Recently, religious harmony has become a growing field in social science research. Most of the contradictions are to occur in the world by name of religions. It is a universal truth that the way of inter-religious understanding can create a peaceful environment in a plural society. Thus, in this context, the study aims to examine the theologies between Hinduism, Christianity, and Islam. To reach the objective of this study, data were collected from scriptures and other secondary sources such as research articles, books, web-publications, and video clips. This study complies comparatively and review of literature. The Study concluded with the findings of that three scriptures which were taken up for this study have accepted oneness of God and that all praises, worships, obedience of human beings are blogs to him. In particular, both religions, except Islam, have a polytheism, which contradicts the pure theology of that both religions.*

***Keywords:*** *Christianity, Hinduism, Islam, comparative study, scriptures*

**அறிமுகம்:**

சமயம் என்ற சொல் விரிந்த பொருளை உடையது. பெருந்தொகையான அம்சங்கள் இதனோடு தொடர்புடையன. பல்வேறு மொழிகளிலும் சமயம் என்ற சொல்லுக்கு சமமான சொற்கள் இருக்கின்றன. ஹீப்ருக்கள் மதம் என்பதைக் குறிக்கப் பிரயோகித்த A-boh_dah என்ற சொல், வணக்கம் (service) என்று பொருள்படும். ஜெர்மனியர் Gottesdienst என்ற சொல்லை இறை வணக்கம் என்ற பொருளில் பிரயோகிக்கின்றனர். ஆனால் ரோமன் இராச்சியத்தில் வழக்கில் இருந்து லத்தீன் மொழியில் இருந்து விருத்தியடைந்த ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிய, போத்துக்கீசிய, இத்தாலிய மொழிகளைப் பேசுவோர் Religoin என்ற பதத்தைப் பிரயோகிக்கின்றனர். லத்தீன் மொழியில் religio என்ற சொல் இதற்காகப் பிரயோகிக்கப்படுகின்றது. ரோமானியப் பேச்சாளரும் சிரியருமான சிஸரோ, இந்தச் சொல் re-legere ஆகிய சொற்களால் ஆனது என்றும், அச்சொற்கள் இரண்டும் சேர்ந்தும் “மீண்டும்


ISBN 978-624-5736-14-0

மீண்டும் வாசித்தல்'' எனப் பொருள்படுகிறது என்றும் கூறுகிறார் (Ameen, 2012). மதச் சார்பான புனித நூல்களை வாசித்தல், அதனையிட்டுச் சிந்தித்தல் என்பதே இதனுடைய பொருளாகும்.

சமயம் என்பதற்கு அறிஞர்கள் பலர் பல வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அவற்றில் ஈ.பி. டைலர் என்பவர் ''சமயம் என்பது மனித நிலையைக் கடந்த வர்க்கத்தின் மீதுள்ள நம்பிக்கை'' எனக் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் இறைவன், கப்ரியேல் (ஜிப்ரீல்) போன்ற தேவ தூதர்கள் மற்றும் சமயச் சார்புடைய இயற்கை கடந்த பிறவிகள் மீதான நம்பிக்கையை அவர் குறிப்பிடுகிறார் (Robin Horton, 1960).

''சமயம் என்பது உயிர்வாழ்வின் முழுமையை உள்ளடக்கியுள்ள ஒரு துறை'' என்பது கொம்டே என்பவரது வரைவிலக்கணமாகும். ''மனித இனத்தின் எல்லாச் செயற்பாடுகளுக்கும் உரிய அறம் சார்ந்த அடிப்படையே சமயம்'' என மகாத்மா காந்தி குறிப்பிட்டார். இரு வரைவிலக்கணங்களுக்கும் சமயமானது வாழ்க்கை முழுதும் ஊடுருவிப்படர்ந்த தன்மையைக் காட்டுகின்றன. சாரதா அம்மையார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் ''சமயம் என்பது மக்களைப் பக்குவப்படுத்தக் கூடியது'' (Ameen, 2012).

எனினும் இது பல்வேறு அம்சங்களைப் பொதிந்ததாக இருப்பதால், திட்டவட்டமான முறையில் அதனை வரைவிலக்கணப்படுத்துவது கடினமாகும். அத்தோடு கடவுள் மீதான விசுவாசத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்பது சமயத்தின் இன்றியமையாத ஓர் அம்சமல்ல என்ற நிலைப்பாடும் உலகில் காணப்படுகின்றது. (உதாரணம்- முற்கால பௌத்தம், ஜைன மதம்)

இருப்பினும், ஒருவன் தான் சார்ந்துள்ள சமயத்தோடு பலம் வாய்ந்ததும், உணர்வு பூர்வமானதுமான ஓர் ஒட்டுறவை ஏற்படுத்திக் கொள்கிறான். வழிபாடு, ஒழுக்கம், அறநெறி, கலை, கண்ணோட்டம், கலாச்சாரம் முதற்கொண்டு நாகரீகங்கள் இதன் அடிப்படையிலேயே தோற்றம் பெறுகின்றன. மறுவார்த்தையில் கூறுவதாயின் இவற்றையெல்லாம் நிர்ணயிக்கும் காரணியாகச் சமய உணர்வு விளங்குகின்றது (பரிஹுல்லாஹ், 1986).

ஆர்னோல்ட் டொய்ன்பி, மனித தோற்றம் குறித்தும் வரலாறு குறித்தும் ஆராய்ந்து பத்துப் பக்கங்களைக் கொண்ட ஒரு நூலை எழுதியுள்ளார். அதில், மனித வரலாற்றிலேயே மதம் முக்கிய இடம் வகித்துள்ளது எனக் குறிப்பிடுகின்றார். மனிதனிலே காணப்படுகின்ற சமய அனுபவமானது பெரும்பாலும் இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டிருப்பதால், அச்சமற்ற நிலை, மன அமைதி, ஆனந்த பரவசம் போன்றவற்றை தோற்றுவிக்க கூடியதாக உள்ளது. இந்த வகையில், சமய அனுபவம் உலகெங்கிலும் ஒரே விதமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்ற வரலாற்று அறிஞரான வில்டுரண்ட், ''மதம் ஆழமானதும் தேர்ச்சிமிக்கதுமான சக்தியையும் செயலாற்றலையும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் வழங்குகின்றது என்பதாக குறிப்பிடுகிறார்.

சமயம் என்பது மனித சிந்தனையிலும் செயற்பாட்டிலும் ஊறிப்போன ஒன்றாக காணப்படுகின்றது. மதத்தின் செல்வாக்கு அதனையொத்த மதவழிபாடுகளுக்கு இட்டுச்சென்றன. இதன் அடிப்படையில் அறிவு வளர்ச்சிக் கேற்ப படிப்படியாக மதங்கள் உண்டாகின எனக் கூறும் கொள்கைக்கு எதிராக இஸ்லாமிய பேரறிஞர் மௌலான மௌதூதி அவர்கள் கூறும் விளக்கத்தை ஈண்டு நோக்குவோம்.

''உலகில் பூரண அறிவொளியில் தான் மனிதன் தன் வாழ்வை துவங்கினான்'' என்று திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. அல்லாஹ் முதன் முதலாக படைத்த மனிதரான ஹஸரத் ஆதம் (அலை) அவர்களுக்கு உண்மை நிலை என்ன என்பதையும், அன்னார் பின்பற்ற வேண்டிய நேர்வழி எது என்பதையும் கற்றுக்கொடுத்தான். இதன் பின்னர் நீண்ட காலம் ஆதத்தின் சந்ததிகள் இந்த நேர்வழியில் நடந்து ஒரே சமூதாயமாக நிலைத்தனர். பின்னர் மக்கள் புதுப்புது வாழ்க்கை நெறிகளை வகுத்துக்கொண்டு விதவிதமான வழிமுறைகளை கடைபிடிக்கலாயினர். உண்மை நிலை (ஹகீகத்) இன்னதென்று அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படாததினால் இந்நிலை ஏற்படவில்லை. மாறாக, உண்மை நிலை இன்னதென்று அறிந்ததும் தங்களுடைய நியாயமான உரிமைகளுக்கு அதிகமாகத் தனிச் சலுகைகளையும், பயன்களையும், இலாபங்களையும் பெற்றுக்கொள்ள சிலர் விரும்பி, தங்களின் வரம்புகளை மீறி ஒருவருக்கொருவர் அநீதி இழைத்து, கொடுமை செய்யத் துவங்கியது தான் அந்தப் புதுவழிகள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது. இந்த நலிவையும் கோளாறுகளையும் நீக்குவதற்காகத்தான் அல்லாஹ் கண்ணியத்திற்குரிய நபிமார்களை அனுப்பினான். சுயமாகத் தம் பெயரில் புதிய சமயங்களை உருவாக்குவதற்கோ, அதன் அடிப்படையில் புதிய சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கோ நபிமார்கள் அனுப்பப்படவில்லை. மக்கள் இழந்து நின்ற சத்திய மார்க்கத்தை அவர்களின் முன் தெளிவாக எடுத்து விளக்குவதற்கும், அவர்கள் அனைவரையும் மீண்டும் ஒரே சமூதாயமாக அமைப்பதற்குமாகவே அனுப்பப்பட்டனர்'' (Ameen, 2012).

இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. (ஆரம்பத்தில் மனிதர்கள் அனைவரும் ஓரே சமுதாயத்தவராகவே இருந்தனர். அவர்கள் நேரான வழியில் செல்லும் பொருட்டு நன்மை செய்வோருக்கு நன்மாராயம் கூறும்படியும் தீமை செய்வோருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் படியும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பிவைத்தான். தவிர, அம்மனிதர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துவைக்கும் பொருட்டு, அவர்களோடு சத்திய வேதத்தையும் அருளினான்) (2:213)

இந்த வகையில்தான் தற்போது உலகில் பின்பற்றப்படுகின்ற 'அருளப்பட்ட மதங்கள் (இறைவனால் அனுப்பட்டவைகள்) தோற்றம் பெற்றன. மொகஞ்சதாரோ பகுதி மக்களின் ஓரிரைகொள்கைக்கும் இவ்வாறு அனுப்பப்பட்ட இறைதூதர்களே காரணமாக இருக்கலாம் என்று நம்ப இடமுண்டு (Ameen, 2012). அதேபோல தற்காலத்தில் காணப்படுகின்ற யூத மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் (அஹ்லுல் கிதாப் -இறைவனால் அனுப்பட்டவைகள்) என்பனவும் இதற்கான தெளிவான உதாரணங்களாகும்.


ISBN 978-624-5736-14-0

இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு சமயமும் தமக்கென நம்பிக்கை முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் கைக்கொண்டுள்ளன. சில சமயங்கள் புனித நூல்களைக் கொண்டு தமது இவ்வுலக வாழ்வுக்கான வழிகாட்டுதல்களையும் மறுஉலக வாழ்வுக்கான பாதைகளையும் அமைத்துக் கொள்கின்றன. அந்தவகையில் இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் போன்ற சமயங்கள் அதற்கென பிரத்தியோகமான வழிபாட்டு முறை, நம்பிக்கை மற்றும் வேதம் போன்றவற்றைக் கொண்டுள்ளன (American Heritage Dictionary). அந்தவகையில் இவை மூன்றும் தெளிவான சமயங்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் கிடையாது.

**ஆய்வுப் பிரச்சினை**:

ஆரம்பத்தில் மனிதன் ஒரே இறை வழிபாட்டை ஏற்றுக்கொண்டு வாழ்ந்துள்ளான் (அமீன், 2012). இருப்பினும் பின்னர் ஒவ்வொரு மனித சமூகம் தங்கள் கடவுட் கொள்கையை மாற்றியமைத்துக் கொண்டுள்ளனர். 'இந்துக்கள் பிரம்மா, ஈஸ்வரன், அர்ச்சை அவதாரம் போன்ற கொள்கையின் பால் கடவுளை நோக்குகின்றனர்' (நடராஜன், 1970). கிறிஸ்தவர்கள் இயேசுவை கடவுளாக கொண்டு செயற்படுகிறனர் (இஸ்ஸதீன் ரிழ்வான், 2006). இவ்வாறு ஒவ்வொரு சமயங்களும் ஒவ்வொன்றை வழிபடத் தகுதியாகக் கருதி அதன் மூலம் வாழ்வையும் அமைத்துக் கொண்டுள்ளது.

**ஆய்வு முக்கியத்துவம்**

இலங்கை பல்லின மக்களைக் கொண்ட ஒரு பன்மைத்துவ நாடாகும். இங்கு மதரீதியாக பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பிறமதத்தவர்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். அண்மைக் காலமாக இம்மதங்களுக்கிடையில் ஒரு பதற்றமான நிலை தேன்றியுள்ளது. இந்நிலையில் ஒரு மதக்கொள்கையை பின்பற்றுபவரை ஏனைய மதத்தவர்கள் சந்தேகக் கண்கொண்டு நோக்கல், இனரீதியாக ஓரங்கட்டப்படல், போன்ற நிலை உருவாகியுள்ளன. இந்நிலையில் இம்மூன்று மதங்களுக்குமிடையிலான கடவுள்கொள்கை பற்றிய இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டிப்பது, இங்கு வாழும் தமிழ், கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்களுக்கிடையிலான புரிதலை ஏற்படுத்த வழியமைக்கும். இதன்மூலம் மத நல்லிணக்கத்தை நோக்கி நகர்த்த வாய்ப்பு ஏற்படும் என்பது ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

**ஆய்வின் நோக்கம்:**

கிறிஸ்தவம், இந்து, இஸ்லாம் போன்ற சமயங்கள் மாறுபட்ட கடவுள் கொள்கையை கொண்டிருந்த போதிலும் அம்மதங்களின் வழிகாட்டல் நூல்கள் அல்லது நூல் (வேதங்கள்) இறைகோட்பாடு (ஒன்றா அல்லது பலதா?) பற்றி கூறும் விடயங்களை ஒப்பு நோக்கி ஆராய்தல்.

**இலக்கிய மீளாய்வு:**

அமீன் ஸீ.எம்.ஏ. என்பவர் (2012) ஹிந்துமதம், பௌத்தமதம், இஸ்லாம் ஓர் ஒப்பீட்டாய்வு என்ற நூலில் இந்து - இஸ்லாம் சமயங்களில் இறைகோட்பாடு பற்றிய குறிப்பிடப்பட்ட ஒரு சில விடயங்களை முன்வைத்துள்ளார். எனினும் இந்து- கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களில்


இறைகோட்பாடு பற்றிய தலைப்புக்களினை அடிப்படையாகக் கொண்டமைந்த ஆய்வுகள் மிக அரிதாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது இவ்வாய்வின் இடைவெளியை காட்டுவதாக அமைந்துள்ளது.

**ஆய்வு முறையும் தகவல் சேகரிப்பும்:**

இந்த ஆய்வு இரண்டாம் நிலைத்தரவுகள் மீதான மீளாய்வை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதற்கான தரவுகள், வேதங்கள், நூல்கள், மற்றும் கட்டுரைகள் என்பனவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன.

மேலும் கிறிஸ்தவர்களின் கடவுள் கோட்பாட்டினை பற்றி பகுப்பாய்வு செய்வதற்கு பைபிளினுடைய புதிய மற்றும் பழைய ஏற்பாடுகள் நேரடியாக ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் இறை கோட்பாட்டு வசனங்கள் அல்குர்ஆனின் திரட்டாக அமைந்துள்ளது.

இவற்றைக் கொண்டு பின்வரும் கட்டமைப்பில் இந்த ஆய்வு இறை கோட்பாடுகளை ஆய்வு செய்கிறது.




இறைவன் பற்றிய சிறப்பு அம்சங்களை வேத நூல்களின் அடிப்படைகளில் வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வினுடைய பகுப்பாய்வில் கிறிஸ்தவ மதம், இந்து மதம், இஸ்லாம் மத வேதங்களினூடாக மேலே உள்ள வினாக்கள் ஆராயப்பட்டுள்ளன. இறை பற்றிய தனிச் சிறப்புக்கள் பல காணப்பட்டாலும் அவற்றில் சில விடயங்களை மாத்திரம் உள்ளடக்கி வேதங்கள் கூறும் இறைவன் ஒருவனா அல்லது பலரா என்பதை அடிப்படையாக வைத்தே பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

**இறைவன் ஒருவன்**

1. இந்து மதம்

*சாந்தோகய் உபநிஷம்* : 312:3 “*ஏகம் ஏவம் அத்வித்தியம்*”

பொருள்: இறைவன் ஒருவனே!

இந்து மத வேதங்களில் குறிப்பாக உபநிஷம் இறைவன் ஒருவன் எனும் கொள்கையை முன்வைத்துள்ளது. ஆனால் இந்துக்கள் பல கோடி தெய்வங்களையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் வழிப்படுகின்றார்கள். கடவுள் என்ற பெயரில் பல பெண்களும் ஆண்களும் தெய்வங்களாக போற்றப்படுகிறார்கள். இதனடிப்படையில் நோக்குகின்ற போது இந்துக்களின் வேதங்களுக்கும் வழிபாடுகளுக்குமிடையில் முரண்பாடு தோற்றம் பெறுகின்றது.

2. கிறிஸ்தவம்

மாற்கு : 12: 29 பொருள் "*கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை என்ன வென்றால் இஸ்ரவலே கேள்! நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்*" (புதிய ஏற்பாடு பக்-67)

கிறிஸ்துவத்தில் இறை கொள்கை மூவகையாகும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. இவ்வசனத்தில் ஓர் இறைக் கொள்கையே கூறப்பட்டுள்ளது. ஏரோமியா: 10:10 – "*கர்த்தரே மெய்யான தெய்வம்*" என்றும் சங்கீதம்: 86: 10 – "*தேவரீர் நீர் ஒருவரே தேவன்*", சங்கீதம்: 90:2 "*பர்வதங்கள் தோன்றும் முன்னும் நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்*" என்று பல இடங்களில் ஓரிறைக் கொள்கை பற்றியும் தேவன் ஒருவன் மாத்திரம் என்றும் கூறப்படுகின்றன. எனினும் கிறிஸ்துவத்தில் முக்கடவுளர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பிதா – படைத்தவன், குமாரன் - படைக்கப்பட்டவர், பரிசுத்த ஆவி – வழி நடாத்துகின்றவர் அல்லது ஆளுகை செய்பவர் என்பதுடன் இன்று மரியாளையும் வழிப்படுகின்றனர். இருப்பினும் கிறிஸ்துவ வேதங்கள் ஒரு தேவன், ஒரே தெய்வம் எனும் வார்த்தையில் உறுதி தன்மையை பேணுவதாக அமைந்துள்ளது.

3. இஸ்லாம்

அத்தியாயம் : 112:4 பொருள் : "*அல்லாஹ் ஒருவன் தான் என (நபியே) நீர் கூறுவீராக*"

இஸ்லாம் ஆதி முதல் அந்தம் வரை இறைவன் ஒருவன் எனும் கொள்கையை பின் பற்றியதாக உள்ளது. இஸ்லாத்தை மார்க்கமாக கொள்ளும் மனிதர்களும் வேதத்தின் இருப்புக்கேற்ப ஒரே இறைவன் பால் வழிபாட்டினை அமைத்துக் கொண்டுள்ளனர். இதனை ஏனைய வேதங்கள் கூற இஸ்லாம் இக்கொள்கையை வலியுறுத்துகின்றது.

எனவே மூன்று மதங்களின் வேத ஆதாரங்களை வைத்து நோக்குகின்ற போது இவை மூன்றும் ஒரே இறைவனையே குறித்து நிற்கின்றன. இருப்பினும் இஸ்லாத்தைத்தவிர ஏனைய இரு மதங்களிலும் வழிபடக்கூடிய இடங்களில் இறைவனுடன் சேர்த்து ஏனையவற்றையும் ஆக்கியுள்ளனர் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

**இறைவனுக்கு நிகர் இல்லை**

1. இந்து

ஸ்வஷ்தாவதார உபநிஷம் : 4:19 – *"நா தஸ்தி பிரதிம அஸ்தி" பொருள் : "அவனுக்கு நிகராக எதுவுமில்லை"*

படைக்கப்பட்ட பூமி ஒன்று எனவே படைத்தவனும் ஒருவனே! பல தெய்வங்கள் சேர்ந்து பூமியை படைத்திருந்தால் இவ்வாறு பூமி சீராக அமைந்திருப்பது என்பது இறைவன் ஒருவன் அவனுக்கு நிகராக எதுவுமில்லை என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இறைவனுக்கு ஆண் மக்களும் இல்லை, பெண் மக்கள் இல்லை அவனுக்கு நிகராக எதுவுமில்லை. காத்தலுக்கு – விஷ்னு, அழித்தல் - பிரம்மா, படைத்தல் - சிவன் ஆனால் இவையாவையும் சிவனே நிறைவேற்றுகின்றான் என இந்து மதம் கூறுகின்றது. இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி பொறுப்புக்களை செய்கின்றனர். இவை மதங்களின் வேதங்களை சார்ந்தாக உள்ளதா அல்லது மாற்றத்துக்கு உட்பட்டதாக உள்ளதா என்பது அறியப்படாததாகும்.

2. கிறிஸ்தவம்

சங்கீதம்:113:05 பொருள் : "*உன்னதங்களில் வாசம் பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமமானவர் யார்? (இணையானவர் அல்லது ஒப்பானவர் யார்?)"* (பைபில் பழைய ஏற்பாடு பக்- 742)

பைபிளானது, தேவானாகிய கர்த்தருக்கு நிகர் உண்டா? என்பதன் பிரதிபலிப்பதானது அவனுக்கு நிகர் இல்லை என்பதையே குறித்து நிற்கின்றது. கர்த்தர் படைக்கப்பட்டவராகவும் தேவன் படைத்தவனாகவும் கிறிஸ்தவர்களால் மூவகை இறை கொள்கையின் பால் வழிப்படுத்தபடுகின்ற வேளையில் இங்கு கர்த்தரும் தேவரும் ஒருவராகவும் படைக்கப்பட்ட ஈஸா அடியானாகவும் கொள்ளப்படுகிறார். இவர் கர்த்தரின் தூதராகவும் கர்த்தரின் உதவியை நாடக்கூடியவராகவும் மாத்திரமே காணப்படுகின்றார்.

3. இஸ்லாம்

அல்குர்ஆன் : 112: 4 பொருள் : " *மேலும் அவனுக்கு நிகராக எவருமில்லை*"

உலகம் தோன்றும் முன்னும் பின்னும் ஒருவனே இறைவனாக உள்ளான் என்பதை இது பறைசாற்றுகின்றது. அதாவது அல்லாஹ்வை மற்றும் முன்னுரிமைப்படுத்தி வழிப்படுவதாகும். தூதர்களாவர், இவர்கள் இறைவனின் தூதை உலகறியச் செய்வதற்காக அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். உலகில் அனுப்பட்ட தூதர்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் இறைவனாக்கவுமில்லை வழிபடச் சொல்லவுமில்லை. ஒரே கொள்கை ஒரே இறைவன், அவனுக்கு ஒப்பாக எவருமில்லை, அவனே உயர்ந்த நாயன், என்பதே இஸ்லாத்தின் இறை பற்றிய பொதுத் தன்மையாகும்.

கிறிஸ்தவம் மற்றும் இந்து வேதங்கள் இறைவனுக்கு இணையில்லை என்பதை வலியுறுத்துவதாக போதனையை கொண்டுள்ளது. கடவுள் ஒன்று என்பதை கூறுவதுடன் அதனைத் தொடர்ந்து அவனுக்கு நிகர் இல்லை என்பதையும் தெளிவுபடுத்துவதானது ஓர் இறைக் கொள்கையை மேலும் சாட்சி பகிர்வதாக உள்ளது.

**இறைவன் புலப்படாதவன்**

1. இந்து

உபநிஷம் : 4: 20 *''நா சம்தரஸே திஸ்ஸத்தி ரூபம் அஸ்ய நா கக்ஸீஸா பஸ்ஸதி கஸ் கனைனம்''*

பொருள் : அவனது உருவத்தை பார்ப்பதில்லை. Endinichiyam கூறும் வார்த்தை இவ்வாறு இருக்க, இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் இறைவனுக்கு உருவத்தை வடித்து அதற்கு பல கைகள், பல தலைகள், என இறைவனை சிலையில் தேடுகின்றனர். ஆனால் அனைத்தையும் படைத்த இறைவன் தத்துவரூபமானவன். அவன் தனித்தவனுமாவான். இவ்வாறிருக்க படைப்பட்ட மனிதன் தான் படைகின்ற ஒன்றில் படைத்தவனை தேட முடியுமா, வழிப்பட முடியுமா? என்பதனை மேற்படி வேத வசனங்கள் தெளிவாக உணர்த்துகின்றன.

2. கிறிஸ்தவம்

யோவான் : 1 : 18 பொருள் : *''தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை''* (பைபில் புதிய ஏற்பாடு)

கிறிஸ்தவம் கூறுகின்றது படைத்தவனை இதுவரையில் கண்டதில்லை என இருப்பினும் கிறிஸ்தவர்கள் இரட்சகனாக கொள்ளும் இயேசுவை அவர்கள், நோயிலிருந்தும் பாவத்திலிருந்தும், சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்தும் தங்களை இயேசுவே மீட்டதாக கூறுகின்றனர். இயேசு கடவுள் என்றால் இயேசுவின் மார்பில் சாய்ந்த அன்பான சீடன் என்ற பெயரை எடுத்த அவனின் வார்த்தை பொய் என்றாகி விடுகிறது. இறைவனை யாரும் பார்த்ததில்லை என்று பைபிள் கூறும் அதேவேளை கடவுளாக கொள்ளும் இயேசுவை அனைவரும் கண்டும், தொட்டும் இருக்கின்றனர். மேலும், யூதர்கள் அவரை கொலை செய்ய எத்தணித்த போது இறைவனான அவர் தன்னை காப்பாற்றிக் கொண்டிருக்க முடியும். ஆனால் அவர் தன்னை மரணத்திலிருந்து மீட்க தேவனை நோக்கி விண்ணப்பம் செய்தார் எனில் தேவன் (அல்லாஹ்) உயர்ந்தவன் என பின்வரும் வசனம் கூறுகின்றது. தீமத்தேயு 6: 16 *''ஒருவராய் சாவாமையுள்ளவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் மனுஷரில் ஒருவரும் காணாதவரும் காணக் கூடாதவருமாயிருக்கிறவர்''* என்று தெளிவாக இறை பற்றியே கூறுகின்றது.

இந்நிலையில் கிறிஸ்தவர்கள் முக்கடவுட் கடவுட்கோட்பாட்டை முன்வைப்பதனால் இங்கு இறைவனாக யாரை ஏற்றுக்கொள்வது என்ற நிலை ஏற்படுகின்றது. ஆனால் வேத வசனம் இயேசு, தேவனை அதாவது அவருக்கு மேலானவரை நோக்கி விண்ணப்பம் செய்கிறார் என்று கூறுவதனூடாக அவருக்கும் மேலான ஒரு இறைவன் இருக்கிறார் என்பதே அர்த்தமாக கொள்ள முடியும். அதே வேளை, இறைவனுக்கு பிறப்பு, இறப்பு எதுவுமில்லை. இயேசுவுக்கு பிறப்பும் இறப்பும் உள்ளது என்பதும் நோக்கத்தக்கது.


ISBN 978-624-5736-14-0

**2.** இஸ்லாம்

அல்குர்ஆன்: 6: 103, அல்குர்ஆன் : 07: 143, “*பார்வைகள் அவனை அடையாது. அவனோ பார்வைகளை அடைந்து கொள்கிறான். இன்னும் அவனே நுட்பமானவனும், நன்கறிந்தவனுமாவான்.*”

இங்கு இஸ்லாம், இறைவனை யாரும் பார்த்திட முடியாத அதேவேளை ‘அவனே பார்வைகளை அடைந்து கொள்கிறான்’ அதாவது அனைத்தும் பார்க்கக்கூடிய ஆற்றலை அவன் மாத்திரம் பெற்றுள்ளதாக கூறுகின்றது.

இஸ்லாத்தின் ஏவல்களைப் போன்று இறை பற்றிய கோட்பாட்டின் சிறப்பம்சமாக இறைவனை யாரும் புலங்களுக்குட்படுத்த முடியாது என்பதை கிறிஸ்தவ பைபிளும், இந்துக்களின் வேதமும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் பார்க்க முடியாத இறைவனை பல வடிவங்களில் சிலைகளில் வடித்தெடுக்கின்றனர். இங்கு புலப்படாதவன் என்பது புலன்களுடன் மட்டுப்பத்தப்பட்ட ஒரு விடயமல்ல, மாறாக மனிதனின் அகக் கண்கள் (சிந்தனை)க்கும் உட்படாதவன் இறைவன் என்பதே அதன் புரிதலாகும்.

**இறைவன் பெரியவன்**

1. இந்து மதம்

அதர்வ வேதம் (20:58:3)

தேவ் ஓசி கூறுகிறார். “நிச்சயமாக கடவுள் மிகப் பெரியவனாவான், எல்லாவற்றையும் பரிபாளிப்பவன் இறைவன். அவனை இந்து மதம் மிருக உருவிலும், மனித உருவிலும் சிலை வடித்து அதனை கடவுள் என நினைத்து அதற்கு மரியாதை செலுத்தி வழிபடுகின்றனர்” இங்கு இந்து மதம் இறைவனை மிகப் பெரியவனாக கருதுகின்ற போதிலும் மனிதனுக்கு ஒப்பாகவும் ஏனைய படைப்பினங்களின் வடிவங்களைக் கொண்டும் இறைவழிபாட்டை மேற்கொள்பவர்களாக காணப்படுகின்றனர்.

**2. கிறிஸ்தவம்**

சங்கீதம் ( 104:1) “*என் ஆத்மாவே கர்த்தரை ஸ்தோத்தர் (புகழ்) என் தேவனாகிய கர்த்தாவே நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்*”

தேவன் (இறைவன்) எல்லாவற்றை விடவும் பெரியவனாக இருக்கிறான் என்று கிறிஸ்தவம் கூறுகின்றது. இதனை வலுப்படுத்துவதாக சங்கீதம் 97:9 “*கர்த்தாவே பூமி முழுவதுக்கும் நீர் உன்னதமானவர், எல்லா தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர்*” என்று மேலும் கூறுகின்றது. கிறிஸ்தவ வேதங்களின் படி, கிறிஸ்தவர்கள் வணங்கக்கூடிய இறைவன், அனைத்திலும் பார்க்க மேலானதாக இருக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறு நோக்கும் போது, இயேசு அந்த தெய்வத்தின் படைப்பு ஆகும். எனவே, பைபிளை பொருத்தவரையில், எல்லா தேவர்களிலும் இறைவன் ஒருவனே பெரியவனாவான்.

**3. இஸ்லாம்**

அத்தியாயம் (4:34) ''*நிச்சயமாக அல்லாஹ் மிக உயர்ந்தவனாக மிகப் பெரியவனாக இருக்கின்றான்''.*

அல்லாஹ் மிக உயர்ந்தவனும் பெரியவனும் என்றும் மனிதனின் நினைவு செயல்கள் யாவையும் நன்கறிந்தவனுமாவான். ஒரு தாயின் கருவறையிலிருந்து ஒரு குழந்தையை பிறக்கச் செய்பவனும் அவனே இறக்கச் செய்பவனும் அவனே, அவனையன்றி ஒரு அணு கூட அசையாது. அவன் யாரையும் பெறவுமில்லை யாராலும் பெறப்படவுமில்லை. நினைத்தால் இயலாதது என்று ஒன்றுமே இல்லை. அவனது படைப்பினம் அவனை மறந்து வழிகேட்டில் போனாலும் அவனை மாற்றுவதற்கேன்று காலத்திற்கு காலம் தூதர்களை அனுப்பி வைத்தான், நிச்சயமாக அல்லாஹ் உயர்ந்தவனும் மிகப் பெரியவனுமாவான், என்பதே இஸ்லாத்தின் இறைகோட்பாடு பற்றிய நிலைப்பாடாகும். அதாவது, அனைத்து வல்லமையையும் சக்தியையும் இறைவன் (அல்லாஹ்) ஒருவனுக்கு உரித்துடையதாக்கும் அல்குர்ஆன் அவன் ஒருவனே மிக உயர்ந்தவனாகவும் பெரியவனாவும் இருக்கிறான் என்று கூறுகின்றது.

இறைவன் ஒருவன் என்பதை தெளிபடுத்தும் வேதங்கள் அவன் பெரியவன் என்பதையும் சாட்சி பகிர்கின்றன. உண்மையில் பெரியதாக ஒன்று மட்டும்தான் இருக்க முடியும். பல விடயங்கள் அதாவது பல தெய்வங்கள் காணப்பட்டால் அதில் எது பெரியது என்பதில் பாரிய சர்ச்சை ஏற்படக்கூடும்.

**இறைவனை யாரும் அறிந்திட முடியாது**

**1.** இந்து மதம்

பகவத் கீதை ( 17:24:26) ''*எவரும் என்னை அறியான்''*

10:3 – 'ஆதி இல்லாதவன் ஒன்றும் பிறவாதவன் என்றும், உலக தலைவன் என்றும் என்னை அறிகின்றவன் மாதுடன் மயக்கம் இல்லாதவன்'. இந்து வேதங்கள் கடவுளுக்கு தொடக்கமுமில்லை, முடிவுமில்லை, அவனை யாராலும் நினைத்து பார்க்க கூட முடியாது, இவனே மயக்கமில்லாத மனிதன் என்று தெளிவாக குறிப்பிடுகின்றது. எனினும்' இங்கு சாதாரண படைப்பாகிய மனிதன் கற்பனையில் இறைவனை வரைந்திடவும் வடிவமைத்து வணங்கவும் உதவிதேடவும் செய்கின்றனர். இது பகவத் கீதை கூறும் வார்த்தைக்கு முரனாக அமைகின்றது. இறைவன் மேலானவன், அவன் இனையற்றவன், என்ற வேத வசனங்களுக்கு அப்பால் சென்று இந்துக்கள் இறைவனின் ஒட்டுமொத்த ஆற்றலையும் சிலைகளில் உள்ளடக்கி வெறுமைப்படுத்துகின்றனர்.

2. கிறிஸ்தவம்

வெளிப்படுத்தல்: 1:8 ''*இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுடைய கர்த்தர் நான் (அல்பாவும், ஒமெகாவும்) ஆதியும் அந்தமுமாகயிருக்கிறேன்*''. (பைபில் புதிய ஏற்பாடு பக்-333)

இறைவன் உலகம் உருவாகும் முன்னே இருக்கின்றான். அவன் சர்வ வல்லமையுடையவன். அவனுக்கு தொடக்கமுமில்லை முடிவுமில்லை என்று கிறிஸ்தவ வேதங்கள் குறிப்பிடும் போது இயேசு சுத்தமுள்ள பெண்ணின் வயிற்றில் ஆணின் தொடர்பின்றி பிறந்தவர். இந்நிலையில், இறைவன் தேர்ந்தெடுத்த ஒரு தூதர்தான் இயேசு. அவருக்கு மரணம் நேரிட்டது, என்கிறது பைபிள். இயேசு மரணித்து மீண்டும் 3ம் நாள் உயிருடன் எழுந்ததாக வேதாமம் கூறுகின்றது.

சங்கீதம் :9:7 "*கர்த்தரே என்றென்றைக்கும் இருப்பார்*" (பைபிலின் பழைய ஏற்பாடு பக் - 675), இயேசுவை வணக்குத்திற்கு உட்பட்டடவராக கருதுகின்ற போது மேற்கூறப்பட்ட வசனம் இங்கு பொய்பிக்கப்படுவதாக அமைகின்றது. ஏனெனில் வேதங்கள் இயேசுவை மரணிக்கக்கூடியவராகவே காண்பிக்கிறது. மேலும், இறைவனுக்கு தொடக்கம், முடிவுமில்லை என வேத வசனங்கள் குறிப்பிடுவதானது இயேசு கடவுள் அல்ல மாறாக அவர் இறைவனின் தூதராக கொள்ளப்படுவர் என்பதற்கு சான்றுபகிர்கின்றது.

3. இஸ்லாம்

அத்தியாயம் 57: 03 "*அவனே முதலாமவனும் கடைசியானவனும் அவனுக்கு முன்னும் பின்னும் ஒன்றுமே இல்லை அவனே சகலவற்றிற்கும் மேலானவனும் அந்தரங்கமானவனும் ஆவான். மேலும் ஒவ்வொறு பொருளையும் நன்கறிந்தவன்*".

அல்லாஹ்வை எல்லாவற்றிலும் மேன்மையாக்கி காட்டும் அல்குர்ஆன், பூமியையும் வானத்தையும் படைத்து அவற்றின் ஒவ்வொரு பொருளையும் நன்கறிந்தவனாகவும், காலையில் தோன்றி மாலையில் மறைகின்ற சூரியனை அடுத்தடுத்து வருமாறு அமைத்துள்ளவனும், பூமியுள்ள எல்லா மிருகங்களையும் ஊறும் பிராணிகளையும் புழு பூச்சி என எல்லாவற்றையும் கண்கானித்து உணவளிப்பவன் அல்லாஹ் என்பதுடன் அவனது உருவத்தை நினைத்து பார்க்கக் கூட இயலாது என்று கூறுகிறது. இதனை குறிப்பிட 'அந்தரங்கம்' எனும் சொல் இங்கு பிரோயகப்பட்டிருப்பதானது, தனி ஒருவனின் இருப்பை காட்டுவதாக அமைந்துள்ளளது.

அதாவது இறைவன் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு வேதம் இடம் கொடுக்கவில்லை. இன்று அறிவியலின் உச்சத்தில் உலகம் உள்ளது. நாஸ்திகர்கள் தங்களால் பகுத்தறிவின் மூலம் கண்டறிந்த விடயத்தை மாத்திரம் நம்பிக்கை கொண்டு ஏற்றுக் கொள்கிறார்கள். இதனாலேயே அவர்கள் இறை மறுப்பாளர்களாகவும் காணப்படுகின்றனர். ஆனால் இறைவன் பெரியவன் அவனை யாராலும் எளிதாக அறிந்திர முடியாது. உலகின் தோற்றத்திற்கு காரண கர்த்தாவாக இருக்கின்ற அவன் உலகத்தின் அழிவுக்குப் பின்னும் ஒருவனாக என்றும் இருப்பான்.

**புகழ்ச்சிக்குரியவன் ஒருவன்**

1. இந்து மதம்

ரிக் வேதம் 8:11 "*புகழ் அனைத்தும் வல்லமை மிக்க இறைவனுக்கே சொந்தமானது*".

இந்து மதத்தில் புகழ் அனத்தும் வல்லமை மிக்க இறைவனுக்கு எனும் போது இந்து மதத்தில் முப்பத்து முக்கோடி தெய்வங்கள் என்ற கொள்கை காணப்படுகின்ற நிலையில் அனைத்து புகழையும் பெற்று கடவுளாக வழிப்படத்தக்கவர் யார் என்ற சிக்கல் நிலை இங்கு தோற்றம் பெறுகின்றது. இதனை நோக்குகையில், முழுமையான புகழ்ச்சியை பெறும் ஒன்றே இங்கு கடவுளாக கருதப்படும் என்பதே இந்து வேதங்களின் உறுதியான கருத்தாகும்.

2. கிறிஸ்தவம்

தீமேத்தேயு : 1:17 "*நித்தியமும் அழிவில்லாமையும் அதரிணமுள்ள ராஜனுமாய் தாமொருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு கனமும் மகிமையும் சதாக் காலங்களிலும் உண்டாவதாக*" (புதிய ஏற்பாடு பக்-286)

உண்மையும் முடிவு இல்லாமையும் அதரிணமுள்ள ராஜனுமாய் ஒரு இறைவனுமாய் சகல அறிவுக்கும் ஒரே தெய்வமாக இருப்பதற்கு சகல மரியாதையும் புகழும் எப்போதும் இருப்பதாக இறை பற்றி பைபில் குறிப்பிடும் போது கிஸ்தவத்தில் இருக்கும் மூவகையான (பிதா, குமாரன், பரிசுத்த ஆவி) கடவுளுக்கும் கிறிஸ்தவர்கள் மகிமை செலுத்த வேண்டியுள்ளது. மனிதனுக்குள் ஆளுகை செய்பவர் பரிசுத்த ஆவி அவரை எவ்வாறு கனம் (மரியாதை) செய்ய முடியும், குமாரனைப் பார்த்தால் அழிவே இல்லாதவன் இறைவன் என்றால் இயேசுவிற்கு தொடக்கமும் உண்டு அழிவுமுண்டு. இயேசு தன்னை உள்ளடக்கிய தேவனை நோக்கி விண்ணப்பமும் செய்திருக்கிறார், புகழ்ந்துமிருக்கிறார் என்றால் அவருக்கு மேலானவர் தேவன் அவன் ஒருவருக்கே சகல கனமும் (மரியாதை) மகிமையும் உண்டாக வேண்டும்.

3. இஸ்லாம்

அத்தியாயம் 18:1 "*அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்*"

உலகத்தைப் படைத்தவன் உலக சிருஷ்டியின் தளபதி எல்லா அரசர்களிலும் அவனே பெரியவன், உலக இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், என்பது அல்குர்ஆனின் கட்டளையாகும். மனித இனத்தை படைத்து அவனுக்கான சகல காரியங்களையும் இலகுவாக்கி இவ்வுலகில் அவனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டல்களை வழங்கி தங்களை இறைப்பின் பின்னரும் பாதுகாப்பவனாக இஸ்லாம் அல்லாஹுதஆலா ஒருவனை குறிப்பிடுவதுடன் அவனுக்கே அனைத்து புகழ்ச்சியையும் வழங்குகின்றது.

இறைவன் குறித்த சிறப்புக்களில் புகழ்ச்சி என்பது மிக முக்கியமான ஒன்று. இந்துக்கள் கண்கண்ட அனைத்தையும் தெய்வமாக கருதி புகழ்கிறார்கள், கிறிஸ்தவர்களும் அவ்வாறே! ஆனால் வேதங்கள் ஒருவனாகிய தேவனுக்கே என்று கூறுகின்றன.

**முடிவுரை**

வேதங்கள் அனைத்தும் ஒரே இறைவனை ஏற்று அவன் ஒருவனை புகழவும், வழிப்படவும், ஏற்று நடக்கவும் உரித்துடையவன் என்பதை கூறுகின்றது. ஆனால், நடைமுறையில் கிறிஸ்தவம் முக்கடவுட் கோட்பாட்டினூடாக பிதா, மகன், ஆவி என்பவற்றுடன் சேர்த்து

இயேசுவை பெற்றெடுத்த காரணத்ததால் மரியாளையும் வழிபாட்டிற்கு முக்கியத்துவப்படுத்துகின்றது.

அதேபோன்று இந்துக்களை பொருத்தவரையில் வேதங்கள் நான்கு என்றிருந்தாலும் கடவுள்களின் எண்ணிக்கை அதிகமானது. ரிக்வேதம், சாம வேதம், அதர்வண வேதம் அனைத்தும் இந்துக்களின் கடவுள் கொள்கையில் இறைவன் ஒருவன் தனித்தவன், அவன் ஒருவனே புகழப்படக் கூடியவன், அவனை யாரும் அறிந்திர மாட்டார்கள், அனைத்து சக்தியும் அவனுக்குரியது என்று கடவுள் கொள்கை பற்றி கிறிஸ்தவ வேதங்களில் கூறப்பட்டுள்ள அதே விடயங்களை எடுத்தியம்புகின்றது. ஆனால் கிறிஸ்தவத்தை போன்று இதுவும் நடைமுறையில் வேதங்களுக்கு மாற்றமாகவே நம்பிக்கையையும் வணக்கத்தையும் கொண்டுள்ளது. அறிய முடியாது எனக் கூறும் இறைவனை சிலைகளிலும் படைப்புக்களிலும் வடித்துப் பாக்கின்றனர். மும்மூர்த்திகளையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் கடவுள்கள் என்ற தனித்த ஒருவனின் இருப்பை, அறிவுக்கு ஒருவர் அன்புக்கு ஒருவர், படைப்புக்கும் அழித்தலுக்கும் காத்தலுக்கும் என்று தனித்ததனியே பிரித்து வைத்துள்ளனர்.

இஸ்லாம் அல்குர்ஆன் எனும் இறுதி வேதத்தில் இந்து கிறிஸ்தவம் போன்று ஒரே கடவுட் கொள்கைகளையும் (ஓரிறைக் கொள்கை) ஒரே வழிபாட்டையும் முஸ்லிம்களுக்கு மாத்திரமன்றி உலக மனித முழு சமூகத்திற்கும் கட்டளையிடுகிறது. அது புகழப்படக்கூடியவன் ஒருவன் அவன் தனித்தவன், ஈடு இணையற்றவன், அனைத்தையும் பார்ப்பவன் ஏனையோர் பார்வையை விட்டும் விலகியுள்ளான் போன்ற விடயங்களை குறிப்பிடுகிறது.

கிறிஸ்தவர்களும், இந்துக்களும் வேதங்களுக்கு மாற்றமான கொள்கையை கடைப்பிடித்தாலும் முஸ்லிம்கள் இதனின்றும் மாற்றமாக இறுதி வேதமான அல்குர்ஆனின் இறை கொள்கைக்கு ஏற்பவே தங்கள் வாழ்வையும் அமைத்துக் கொண்டுள்ளார்கள்.

மேலும் மனிதர்கள் தங்கள் இயல்புகளுக்கு ஏற்ப கடவுளின் இருப்பையும் அவனுக்கான வணக்கத்தை பலர் பால் மாற்றிக் கொண்டாலும் வேதங்கள் அனைத்தும் இறைவனை ஒருவனாகவே காண்பிக்கின்றது. கிறிஸ்துவத்தில் பைபிள் இயேசுவை இறைத் தூதராக மாத்திரமே காணுகிறது.

மேலும் அனைத்து வேதங்களும் பெருமையும் புகழும் இறைவனுக்குரியவை என்று கூறுவதானது அனைவருக்கும் இறைவன் ஒருவன் என்பதையும் அவன் பலதாக இருந்தால் வேதங்கள் கூறும் பெருமையும் புகழும் இறைவன் பெரியவன் என்பதும் கடவுள் கொள்கையில் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருக்கும்.

இன்னும் முஸ்லிம்கள் வேத (அல்குர்ஆன்) கட்டளைக்கேற்ப ஆரம்பம் முதல் இன்று வரை ஓரிறைக் கொள்கையை ஏற்று வாழ்வதும் கிறிஸ்தவர்களும் இந்துக்களும் வேதங்களின் அப்பால் வணக்கத்தை செலுத்துவதும், இறைவன் ஒருவன் என்றும் அவன் முஸ்லிம்களால் வணங்கப்படுகின்ற அல்லாஹ் மாத்திரமே என்பதும் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

**உசாத்துணைகள்**

அமீன் ஸீ.எம்.ஏ. (2012). *ஹிந்துமதம், பௌத்தமதம், இஸ்லாம் ஓர் ஒப்பீட்டாய்வு.* திஹாரிய றிஸாமா வெளியீட்டகம், வரப்பலான வீதி

அபூ ஆஸியா. (2008). *இந்து-கிறிஸ்தவர்- முஸ்லிம் உரையாடல்.* சென்னை: சாஜிதா புக்சென்டர்.

இஸ்ஸதீன் றிழ்வான். (2006). *கிறிஸ்தவ கடவுள் கொள்கையில்..... அவருடைய இயல்பு என்ன?:* தேசிய நூலக ஆவணவாக்கல் சேவை நிலையம்- பட்டியலாக்கல் வெளியீட்டுப்பிரிவு.

பரிஹுல்லாஹ். (1986). இளைஞர்களுக்கு சமய அறிவு இன்றியமையாததா?. குவின்ஸ்டவுன் உயர் நிலைப்பள்ளி.

பிரஸாத் பி.வி.ஆர்.கே. (1979). *இந்து சமய கையேடு. திருப்பதி:* திருமலை திருப்பதி தேவர்தான வெளியீட்டகம்.

Panikkar, R. (1963). HINDUISM AND CHRISTIANITY. *CrossCurrents, 13*(1), 87-101. Retrieved June 7, 2021, from ர்லுீநுசுடுஐடுமு "ாவவி:.:..:.றறற.தளவழச.ழசப.:.ளவயடிடந.:.24457000" http://www.jstor.org/stable/24457000

Robin Horto. (1960). A definition of religion, and its uses. *the journal of the royal anthropological institute of Great Britain and Ireland 90 (2), 201-226,*

Sheth, N. (2002). Hindu Avatāra and Christian Incarnation: A Comparison. *Philosophy East and West, 52*(1), 98-125. Retrieved June 7, 2021, from HYPERLINK "http://www.jstor.org/stable/1400135" http://www.jstor.org/stable/